**CNR No.TNTU07-000672-2021**

**சார்பு நீதிமன்றம்,வாணியம்பாடி,திருப்பத்தூர்மாவட்டம்**

**முன்னிலை :** B.ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் நாள் வியாழக்கிழமை
(2058 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை திங்கள் 03ம் நாள்)

**அசல் வழக்கு எண்.258/2021**

முருகன்
த/பெ. மாணிக்கம் ..... வாதி

/ எதிர் /

ஆனந்தி
க/பெ ஏழுமலை ..... பிரதிவாதி

அசல் வழக்கானது இறுதியாக, கடந்த 26.03.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு எம். சிவா, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தோன்றாதரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, வாதி தரப்பு வாதங்களைக் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**தீர்ப்பு**

**01)** தாவா விற்கிரைய உடன்படிக்கையின் படி, மீதி கிரையத்தொகை ரூ.10,000/-ஐ வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு, தாவா சொத்து குறித்து, வாதியின் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் ஒன்றை பிரதிவாதி எழுதிக் கொடுக்கவேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், தாவா சொத்து குறித்து வாதியின் பெயருக்கு நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்ற ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காகவும், அல்லது மாற்றுமுறை பரிகாரமாக தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள முன்பணம் ரூ.1,00,000/-ஐ

பின்வட்டியுடன் வாதிக்கு, பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்றும் , தாவா சொத்தை பிரதிவாதி எந்தவொரு வில்லங்கமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், வாதியால் அசல் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02) வழக்குரையின் சுருக்கம்:**

தாவா சொத்து கடந்த 20.02.2020 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி, பிரதிவாதிக்கு சொந்தமானதாகும். தாவா சொத்தினை விற்பனை செய்வது தொடர்பாக, வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் முடிவில், தாவா சொத்தினை, பிரதிவாதியிடமிருந்து ரூ.1,10,000/-ம் தொகைக்கு, வாதி கிரையம் பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு, அது தொடர்பாக, கடந்த 20.11.2020ம் தேதியில், வாதி மற்றும் பிரதிவாதி இருவருக்கும் இடையில் வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விற்கிரைய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி விற்கிரைய உடன்படிக்கை ஆவண தேதியில், வாதியிடமிருந்து ரூ.1,00,000/- முன்பணமாக, பிரதிவாதி பெற்றுக் கொண்டுள்ளார். மீதியுள்ள பாக்கி கிரைய தொகை ரூ.10,000/-ஐ 11 மாத காலக்கெடுவிற்குள் வாதியிடமிருந்து, பிரதிவாதி பெற்றுக்கொண்டு, தாவா சொத்து தொடர்பான கிரைய ஆவணத்தை வாதி பெயருக்கு எழுதிக்கொடுக்கவேண்டும் என, நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

வாதி, தன் தரப்பு ஒப்பந்த பகுதியை நிறைவு செய்ய எப்போதும், விருப்பத்துடனும், தயார் நிலையிலும் இருந்துள்ளார். பல்வேறு தேதிகளில், வாதி, பிரதிவாதியை நேரில் அணுகி, மீதியுள்ள கிரைய தொகை ரூ.10,000/-ஐ பிரதிவாதியிடம், கொடுத்து, கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க கேட்டுள்ளபோது, பிரதிவாதி அதற்கு வீண் காரணங்களை கூறி, காலம்

தாழ்த்தியுள்ளார்.

இந்நிலையில், வாதி, கடந்த 18.10.2021ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை பிரதிவாதிக்கு அனுப்பி, விற்கிரைய உடன்படிக்கையின்படி, வாதியின் பெயருக்கு தாவா சொத்தினை கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க கடந்த 27.10.2021ம் தேதி வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதிவாதி அதனை பெற்றுக்கொண்டு, பின்னிட்டு, பிரதிவாதி தாவா சொத்து குறித்து வாதி பெயருக்கு, மேற்படி தேதியில் கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க முன்வரவில்லை. அதற்கு மாறாக, தாவா சொத்தினை வாதியை ஏமாற்றும் நோக்கில், உரிமை மாற்றம் செய்ய பிரதிவாதி முயன்று வருகிறார். தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் உள்ள மீதி கிரைய தொகை ரூ.10,000/—ஐ நீதிமன்றத்தில் வாதி வைப்பீடு செய்ய தயாராக உள்ளார்.

ஆகையால், தாவா விற்கிரைய உடன்படிக்கையின்படி, மீதிக்கிரையத்தொகை ரூ.10,000/—ஐ வாதியிடமிருந்து பிரதிவாதி பெற்றுக்கொண்டு தாவா சொத்து குறித்து, வாதியின் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் ஒன்றை பிரதிவாதி எழுதிக் கொடுக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், தாவா சொத்து குறித்து வாதியின் பெயருக்கு நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்ற ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காகவும், அல்லது மாற்றுமுறை பரிகாரமாக தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள முன்பணம் ரூ.1,00,000/—ஐ பின்வட்டியுடன் வாதிக்கு, பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்றும், தாவா சொத்தை பிரதிவாதி எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், வாதியால் அசல் தாவா தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

03) தாவா தொடர்பாக இந்நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்டுள்ள நீதிமன்ற அழைப்பாணையை பிரதிவாதி பெற்றுக்கொண்டு, வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளார். பின், பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாதரப்பினர் நிலையில் பிரதிவாதி சேர்க்கப்பட்டுள்ளார்.

04) இவ்வழக்கினை பொறுத்த வரையில், வாதிக்கு தாவா பரிகாரம் கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

05) வாதி தரப்பில் தாவாவை தாக்கல் செய்துள்ள வாதி முருகன் என்பவர் வா.சா.1 ஆகவும், விக்னேஷ் என்பவர் வா.சா.2 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார்கள். வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

06) வாதி தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞரின் வாதங்களைக் கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது. வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>07) பிரச்சனைக்குரிய தீர்வு :</u>**

தாவா சொத்தை, வாதிக்கு ரூ.1,10,000/–த்திற்கு கிரையம் கொடுப்பதாக, ஒப்புக்கொண்டுள்ள பிரதிவாதி, கடந்த 20.11.2020ம் தேதி, அதற்காக வாதியிடம் ரூ.1,00,000/– முன்பணம் பெற்றுக்கொண்டு, பதிவு செய்யப்பட்ட விற்கிரைய உடன்படிக்கை ஆவணம் ஒன்றை வாதி

பெயருக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளதாக வாதி வழக்கினை முன்வைத்துள்ளார். மேற்படி, பதிவு செய்யப்பட்ட விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆக வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குரை சங்கதிகளை எடுத்துரைத்து, வா.சா.1 ஆக வாதி முருகன் என்பவர் இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதலாவதாக சாட்சி கையெழுத்திட்டுள்ள விக்னேஷ் என்பவர் வா.சா.2 ஆக இவ்வழக்கில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுள்ள வா.சா.2 விக்னேஷ் என்பவர் வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார்.

வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் உள்ள கையெழுத்து, தன்னுடைய கிடையாது என மறுத்து, பிரதிவாதி எதிர்வாதம் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம், வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில், சட்டப்படியாக பதிவு செய்யப்பட்டுள்ளதையும், பிரதிவாதி மறுக்கவில்லை.

வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணம், தகுந்த மறுப்பயனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள உண்மையான ஆவணம் என்ற வழக்கு சங்கதியை வாதி இந்நீதிமன்றத்தில் நிரூபித்துள்ள நிலையில், அதனை மறுத்து பிரதிவாதி தன் தரப்பு எதிர்வாதத்தை நிரூபணம் செய்ய இவ்வழக்கில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தாமல், வழக்கு விசாரணையில் தோன்றாதரப்பினர் நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆகையால், வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணம், தாவா சொத்தினை வாதிக்கு, விற்பனை செய்யும் எண்ணத்தில், வாதியிடமிருந்து முன்பணம் ரூ.1,00,000/-ஐ பெற்றுக்கொண்டு, தகுந்த

மறுப்பயனுக்காக வாதி பெயருக்கு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள உண்மையான ஆவணம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவண சரத்துக்களின்படி வாதி, தன் தரப்பு ஒப்பந்த பகுதியை நிறைவேற்றம் செய்ய எப்போதும் விருப்பத்துடனும், தயார் நிலையிலும் இருந்துள்ளாரா? என்பது குறித்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய ஒப்பந்த உடன்படிக்கை ஆவண தேதியில், விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள, மொத்த கிரைய தொகை ரூ.1,10,000/—ல் முன்பணமாக ரூ.1,00,000/—ம் வாதியால், பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள ரூ.10,000/—ம் தொகைக்கு, 11 மாதம் காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டு, மேற்படி ஆவணத்தில் குறிப்புகள் உள்ளது.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள மொத்த கிரைய தொகையில் சுமார் 95% தொகை ஏற்கனவே வாதியால் பிரதிவாதிக்கு முன்பணமாக கொடுக்கப்பட்டுள்ள நிலையில், மீதியுள்ள குறைந்தபட்ச தொகையான ரூ.10,000/—ஐ செலுத்துவதற்கு 11 மாதங்கள் காலக்கொடு என்ன காரணத்திற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதிக்கு வழக்குரையிலும், வாதியின் வாய்மொழி சாட்சியத்திலும், எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில், கூறப்பட்டுள்ள மீதி கிரையத்தொகை ரூ.10,000/—ஐ பிரதிவாதியிடம் செலுத்தி, கிரையம் செய்துக்கொள்ள வாதி பல்வேறு தேதிகளில், பிரதிவாதியை நேரில் அணுகியுள்ளபோது, பிரதிவாதி, தேவையற்ற காரணங்களை கூறி வீண் காலதாமதம் செய்ததாக வாதி வழக்கில்

கூறியுள்ளார்.

ஆனால், குறிப்பாக எந்த தேதி ?, எந்த மாதம்?, எந்த வருடம்? எங்கு வைத்து ?, யார் முன்னிலையில் ?, பிரதிவாதியை வாதி, அணுகியுள்ளார் என்பது தொடர்பாக வழக்குரையிலும், இந்நீதிமன்ற வாய்மொழி சாட்சியத்திலும், வாதியால் தெளிவான விவரங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை.

வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள 11 மாத காலகெடு முடிவடையும் தருவாயில், கடந்த 18.10.2021ல் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு வாதியால், பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய காலக்கட்டத்தில், மீதி பாக்கி கிரைய தொகையை பிரதிவாதியிடம் கொடுத்து, தாவா சொத்து தொடர்பான கிரைய ஆவணத்தை கிரையம் பெறுவதற்கு வாதி, தயார் நிலையிலும், விருப்பத்துடனும் இருந்துள்ளார் என்பதற்கு வாதி தரப்பில், இவ்வழக்கில் வேறு எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள மீதி கிரையத்தொகை ரூ10,000/-ஐ பிரதிவாதியிடம் செலுத்துவதற்கு வாதிக்கு போதுமான வசதி வாய்ப்புகள் உள்ளது என்பது தொடர்பாக இவ்வழக்கில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் வாதியால் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மீதிக்கிரையத்தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வாதி தரப்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வா.சா.ஆ.1 விற்கிரைய உடன்படிக்கை ஆவண தேதிக்குப்பின் வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ள கடந்த 11.11.2021-ம் தேதி வரை வாதி தன் தரப்பு ஒப்பந்த பகுதியை நிறைவேற்றம் செய்ய விருப்பத்துடனும் தயார் நிலையிலும் இருந்துள்ளார் என்பதற்கும், இவ்வழக்கில் வாதியால் வேறு

எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

பொதுவாக, ஏற்றுதை ஆற்றுக பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்படும்போது, ஒப்பந்த தேதியிலிருந்து, வழக்கு தாக்கல் செய்யும், தேதி வரையிலும், அதன் பின்னிட்ட காலத்திலும், வாதி தன் தரப்பு ஒப்பந்த பகுதியை நிறைவேற்ற தயார் நிலையிலும், விருப்பத்துடனும் இருந்துள்ளார் என்பதை வழக்குரையில் எடுத்துரைத்து, அதனை நிரூபிக்க வேண்டியது சட்டப்படியாக வாதி தரப்பு கடமையாகும்.

இதுபோன்ற வழக்குகளில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால், சமீபத்தில் வழங்கப்பட்டுள்ள கீழ்கண்ட முன்தீர்ப்பினை இந்நீதிமன்றம் கவனத்தில்கொள்கிறது.

2022(3) CTC 650

IN THE HIGH COURT OF MADRAS

S.A.No.441 of 2016 in C.M.P.No.7531 of 2016

18.02.2022

Prabakaran ....Appellant

Vs.

Geetha ....Respondent

Specific Relief Act, 1963 (47 of 1963), Section 16(c) Contract Act. 1872 (9 of 1872), Section 55 Specific Performance - Readiness & willingness Legal Notice issued after expiry of 2 year period - stipulated in Sale Agreement - Delay not explained - Held readiness and willingness of Plaintiff not established Readiness and willingness to be established independent of Defendant's conduct - **Specific Performance being equitable remedy, readiness and willingness must necessarily be shown from date of**

**Agreement till passing of Decree in Suit** - Appeal allowed - Appellant directed to refund Advance amount paid with Interest.

இவ்வழக்கினை பொறுத்தவரையில், வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள சரத்துக்களின்படி, வாதி தன் தரப்பு, ஒப்பந்த பகுதியை நிறைவேற்றம் செய்ய எப்போதும் தயார் நிலையிலும், விருப்பத்துடனும், இருந்துள்ளார் என்ற வழக்கு சங்கதி வாதி தரப்பில் இவ்வழக்கில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், தாவாவில் வாதி முன்வைத்துள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம், வாதி பெறமுடியாது என இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுகிறது.

இந்நிலையில், வாதியால், பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ள வா.சா.ஆ.1 தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள முன்பணத் தொகை ரூ.1,00,000/-ஐ பிரதிவாதியிடமிருந்து வாதி பெறுவது தொடர்பான மாற்றுமுறை பரிகாரம் வழங்குவது நீதியின்நலனுக்கு உகந்தது எனவும், அதனை பிரதிவாதியிடமிருந்து, திரும்ப பெறுவதுவரை தாவா சொத்தை பிரதிவாதி எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்த கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது எனவும், முடிவு செய்யப்பட்டு, வாதிக்கு தாவாவில் ஏற்பட்டுள்ள செலவினங்களை பிரதிவாதி கொடுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டு, தாவாவில் வாதி வேறு எந்த பரிகாரமும் பெற முடியாது என தாவா பிரச்சனை இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

08) **முடிவில்**, தாவாவில் வாதி முன்வைத்துள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எதுவும் வாதி பெற முடியாது என்றும், மாற்றுமுறை பரிகாரமாக தாவா விற்கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கண்டுள்ள கிரைய முன்பணம் ரூ.1,00,000/-ஐ விற்கிரைய உடன்படிக்கை ஆவண தேதியில் இருந்து தாவா தாக்கல் செய்துள்ள தேதி வரை 12% வட்டியுடனும், தாவா

தாக்கல் செய்துள்ள தேதியிலிருந்து தீர்ப்பு தேதி வரை 9% வட்டியுடனும், தீர்ப்பிற்கு பின் முழுத் தொகை வசூலாகும் வரை 6% வட்டியுடனும், தாவாவில் வாதிக்கு ஏற்பட்டுள்ள செலவினங்கள் அனைத்தையும் பிரதிவாதி கொடுக்க வேண்டுமென்றும், அதனை திருப்பி செலுத்தும் வரையில், தாவா சொத்தை பிரதிவாதி எந்தவொரு உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.16 17:33:49 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**வாதி தரப்பு சாட்சிகள் :-**

வா.சா.1 – முருகன்
வா.சா.2 – விக்னேஷ்

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| **ஆவணங்களின் வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.11.2020 | அசல் விற்கிரைய உடன்படிக்கை ஆவணம் |
| வா.சா.ஆ.2 | 18.10.2021 | வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் |
| வா.சா.ஆ.3 | -- | அஞ்சல் ஒப்புதல் அட்டை. |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.16 17:34:01 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி